நாள்- 03.02.2023

Case No. OS.39/2017

PW.1 -கண்ணன் – பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

என்னுடைய அப்பா பெயர் என்ன என்றால் கந்தசாமி ஆகும். என் அப்பாவிற்கு எத்தனை பிள்ளைகள் என்றால் என்னையும் சேர்த்து இரண்டு மகன்கள். என்னை தவிர மற்றொரு மகன் பெயர் என்ன என்றால் துரைசாமி ஆகும். வழக்கில் குறிப்பிட்டுள்ள அசோக்குமார் என்பவர் யார் என்றால் என் அண்ணன் துரைசாமி மகன் ஆவார். 2 முதல் 4 பிரதிவாதிகள் யார் என்றால் என் அண்ணன் துரைசாமியின் மகன் அசோக்குமாரின் பிள்ளைகள் ஆவார்கள். என் தந்தை கந்தசாமி எந்த தேதி, மாதம், வருடம் இறந்தார் என்றால் சுமார் 28 ஆண்டுகளுக்கு முன்பு பாம்பு கடித்து இறந்தார், தேதி, மாதம்,வருடம் சரியாக ஞாபகமில்லை. எனக்கும், என் அண்ணனுக்கும் திருமணமாகி தனித்தனியாக அவரவர்கள் வீட்டில் வசித்து வருகிறோம் என்றால் சரிதான். எனக்கும், அவருக்கும் பிரச்சனை இல்லை என்றால் சரியல்ல.

(பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வழக்கு ஒத்தி வைக்கப்பட்டது)